


கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை மாநகரில் பெய்த திடீர் பெருமழையால் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புகளின் தொடர் மீட்பு பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். உடன் மதுரை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அருண் தம்புராஜ், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், ஆணையாளர் தினேஷ்குமார், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன், மற்றும் மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்ளார்கள்.

# மதுரையில் போர்க்கால அடிப்படையில் அரசின் துரித நடவடிக்கையால் மழைநீர் வடிந்து இயல்பு நிலை திரும்பியது!

## முதல்வர் – துணை முதல்வர் – அமைச்சர்களுக்கு பொதுமக்கள் பாராட்டு!

மதுரை, அக் 28-

மதுரை மாநகரில் பெய்த வரலாற்று பெருமழையால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் வழி காட்டுதலின்படி அமைச்சர்கள் மேற்கொண்ட போர்க்கால மீட்பு நடவடிக்கையால் சீரமைக்கப்பட்டு தற்போது இயல்பு நிலை திரும்பியது இதற்கு பகுதி மக்கள் பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர்

மதுரையில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரே நாளில் திடீரென பத்து சென்டிமீட்டர் அளவிற்கு வரலாற்று பெருமழை பெய்தது. ஏற்கனவே மதுரை மாவட்டத்தில் பெய்த தொடர் மழையால் மாநகரை ஒட்டியுள்ள பல்வேறு கண்மாய்கள் நிரம்பும் தருவாயில் இருந்த நிலையில் பெருமழைக்கு அனைத்து கண்மாய்களும் நிரம்பி அதிகப்படியான உபரி நீர் வெளியேறு தொடங்கியது

இதன் காரணமாக தாழ்வான குடியிருப்பு பகுதிகளை மழை நீரானது சூழ்ந்தது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரும் போர்க்கால அடிப்படையில் பணியாற்றி மழை நீரை குடியிருப்பு பகுதியிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை துரிதப் படுத்தினர்.

நேற்று இரண்டாவது நாளாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மதுரையில் தங்கி முகாமிட்டு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவல் துறை அமைச்சர் பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோருடன் நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர்.

அமைச்சர் பி.மூர்த்தி நள்ளிரவு ஒரு மணி வரை வெள்ளம் சூழ்ந்த பல்வேறு பகுதிகளை நேரில் சென்று மீட்பு பணிகளை தீவிரப்படுத்தி இயல்பு நிலைக்கு கொண்டு வர அதிகாரிகளை முடுக்கிவிட்டார். அதே போன்று செல்லூர் கண்மாயிலிருந்து நேரடியாக வைகை ஆற்றுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் வகையில் புதிதாக கால்வாய் ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் செல்லூரில் இருந்து வரும் உபரி நீர

வைகை ஆற்றுக்கு நேரடியாக கொண்டு செல்லும் பணியும் முடிவுற்றது.

மேலும் இனி இது போல் மழை நீரானது குடியிருப்பு பகுதிகளை சூழாத வண்ணம் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

கடந்த இரண்டு நாட்களும் மழை நீர் சூழ்ந்த பகுதியான செல்லூர் 50 அடி ரோடு, கட்டபொம்மன் நகர், வாஞ்சிநாதன் தெரு, முல்லை நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சுமார் பத்தாயிரம் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

மேலும் சுகாதாரத்துறை சார்பில் மொபைல் கிளினிக் மூலம் உடல் நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமான மருந்து மாத்திரைகளும் தேவையான ஆலோசனைகளையும் மருத்துவர் குழுவினர் வழங்கினர்,

தற்போது இப்பகுதிகளில் மழைநீரானது படிப்படியாக வெளியேற்றப்பட்டு மீண்டும் முழுமையாக இயல்பு நிலைக்கு மாறி உள்ளது, அப்பகுதி மக்கள் எந்த ஒரு தங்கு தடையும் இன்றி தங்களது பணிகளை செய்ய துவங்கி யுள்ளனர்,

மேலும் இது குறித்து அப்பகுதி பெண்கள் கூறிய போது அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மழை பெய்த இரவு முதலே இப்பகுதியில் வந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்து வந்ததன் காரணமாக தற்போது மழை நீரானது சுத்தமாக வெளியேற்றப்பட்டுள்ளது. அதேபோல இப்பகுதி மக்களுக்கு தேவையான

உணவு , பால், பிரட், பிஸ்கட் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளையும் அவர்கள் செய்து வருகின்றனர் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தது டன் தமிழ்நாடு முதல்வர் துணை முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தங்களது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்தனர்.

மேலும் இந்நிவாரண பணிகளில் மதுரை மாவட்ட கண்காணிப்பாளர் அருண் தம்புராஜ், மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன் மற்றும் மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் என அனைவரும் பங்கேற்றனர்

---

### பசும்பொன் தேவர் திருமகனார் குருபூஜைக்கு வருகை தரும்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விருதுநகர் வடக்கு மாவட்டம் சார்பில் உற்சாக வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!



விருதுநகர், அக்.28-

விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான தங்கம் தென்னரசு மாவட்டக் கழகத்தினருக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தனபதியார் அவர்கள் வருகின்ற

30-10-2024 - காலை பசும்பொன் தேவர் திருமகனார் குருபூஜைக்கு வருகை தருவதையொட்டி, காலை 10.00 மணியளவில் திருச்சுழி ஒன்றியம், க.விலக்கில் விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள்/நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்/துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கிளைக்கழகச் செயலாளர்கள்/பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### சீரணி படையில் சேர்ந்து கழகக் கொள்கைகளைப் பரப்பிய

## சீரணி சண்முகம் மறைவு!

### ஆர்.எஸ்.பாரதி – டி.கே.எஸ்.இளங்கோவன் – ஆர்.பத்மநாபன் நேரில் அஞ்சலி!

சென்னை, அக். 27 -

பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய 'சீரணி படை'யில் சேர்ந்து

அன்று முதல் கழகக் கொள்கைகளை பட்டி தொட்டியெங்கும்

பரப்பிய கழகச் சொற்பொழிவாளர் "சீரணி ச. சண்முகம்" மறைவுச் செய்தி அறிந்து, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமைக் கழக மேலாளர் ஆர்.பத்மநாபன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய 'சீரணி படை'யில் சேர்ந்து, அன்று முதல் கழகக் கொள்கைகளை தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் பரப்பிய கழகச் சொற்பொழிவாளரும் - 1974ஆம் ஆண்டு ஆயிரம்விளக்கு தொகுதி சீரணித் தலைவராக பொறுப்பு வகித்தவரும் - முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தளபதி ஆகியோரின் அன்பைப் பெற்றவருமான சீரணி ச. சண்முகம் (வயது 84) அவர்கள் வயது மூப்பின் காரணமாக 26.10.2024 அன்று மறைவெய்தினார்.

சென்னை48, மண்ணிவாக்கம், ராஜாத்தி கலைஞர் நகரில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடலுக்கு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி. கே.எஸ். இளங்கோவன், தலைமைக் கழக நிர்வாகி ஆர்.பத்மநாபன் ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாமன்னர்கள் மருது சகோதரர்கள் 223 வது குருபூஜையை முன்னிட்டு ஆலங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், விழாக்குழுவினர் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்

---

## எஸ்.எஸ்.தென்னரசு சகோதரர் எஸ்.எஸ்.சிதம்பரம் மறைவு!

### கழக முன்னணியினர் அஞ்சலி!



சிவகங்கை, அக்.28-

சிவகங்கை மாவட்டம் திருக்கோட்டி யூரில் எஸ். எஸ். தென்னரசு சகோதரர் எஸ்.எஸ். சிதம்பரம் இயற்கை மரணம் அடைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர் திரளாகப் சென்று மறைந்த எஸ்.எஸ். சிதம்பரம் உடல்மீது மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் கழகத்தின் அமைப்பு செயலாளராக வும் சிறுகதை மன்னன் என்று எஸ்.எஸ். தென்னரசு அழைக்கப்பட்டார்.இவருடன் நான்கு சகோதரர்கள் இரண்டு சகோதரிகள் உடன் பிறந்தவர்கள்.

இதில் தென்னரசுவின் இளைய சகோதரர் எஸ். எஸ். சிதம்பரம் 83 .இவர் உடல்நலக் குறைவினால் நேற்று 27ஆம் தேதி அதிகாலை திருக்கோட்டியூ ரில் மரணம் அடைந்தார்.

மரணமடைந்த சிதம்பரத்திற்கு சந்திரா, என்ற மனைவியும் சக்கரவர்த்தி இளையராஜா என்ற மகனும் நாகராணி என்ற மகளும் உள்ளார்கள். மரணமடைந்த சிதம்பரத்தின் உடலுக்கு அவரது சகோதரர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ். எஸ் .அருணாசலம் ஒன்றிய செயலாளர்கள் எஸ். சண்முக வடிவேல் ,பூமணி மாவட்ட கவுன்சிலர் ஏ.டி. என். ரவி, மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ்.அ. வல்லபாய் உட்பட திமுகவினர் கிராம பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு மேல் இறுதி சடங்குகள் நடைபெற்றன.

### எஸ்.எஸ்.தென்னரசு சகோதரர்

## எஸ்.எஸ்.சிதம்பரம் மறைவு!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.28-

கழக முன்னாள் அமைப்புச் செயலாளரும் சிறுகதை மன்னன் என்று அழைக்கப்பட்டவருமான எஸ். எஸ். தென்னரசு அவர்களின் இளைய சகோதரர் எஸ்.எஸ். சிதம்பரம் அவர்கள் தமது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்ற தகவலை அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

"சிறுகதை மன்னர் எஸ்.எஸ். தென்னரசு அவர்களின் சகோதரர் சிதம்பரம் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



ஆங்கிலேயருக்கு எதிராக போராடிய மாமன்னர்கள் மருது சகோதரர்கள் 223 வது குருபூஜை முன்னிட்டு மதுரை தெப்பக்குளத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்ட அன்னாரது திருவுருவ வெண்கல சிலைக்கு கழகத்தின் சார்பில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கழக மாநில நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை மாநகர், மதுரை வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.